3. வாக்கெடுப்பு—நடைமுறை விளக்கம்.

**மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்** : அடுத்தபடியாக, மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு என்ற அலுவலுக்குப் போகும் முன்பு, இப்போது வாக்கெடுப்பு எப்படி நடத்துவது என்பதைப் பற்றி என்னுடைய தீர்ப்பு ஒன்றை முதலிலே அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையில் வாக்கெடுப்பு நடத்துகிறபோது என்னுடைய முடிவை மூன்று முறைகள் அறிவிக்க வேண்டுமென்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் எழுப்பினார்கள். வாக்கெடுப்புக்கு என்ன நடைமுறை என்பது நமது சட்டப் பேரவை விதிகளில் 71-வது விதியில் கூறப்பட்டிருக்கிறது

The Speaker shall put the question to the vote of the House and shall decide it by voices. If the opinion of the Speaker is challenged, he shall take the votes of the House by division என்று சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை விரிவாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது : 17-ம் பதிப்பு, 408-ம் பக்கத்தில். அதில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், முதலில்—

The Speaker, rising from the chair, states or reads the question to the House, beginning with "The question is . . .". The Speaker takes the sense of the House by desiring that "As many as are of that opinion say, 'Aye'" and "As many as are of the contrary opinion say, 'No.'". Then the Speaker expresses his opinion thus. "I think the 'ayes' have it" or "I think the 'noes' have it." If the House is silent, the question is said to be agreed to. If any party challenges the opinion, the Speaker clears the lobby and starts the process of counting which is termed a division.

•

முடிவை ஒரு முறை அறிவித்துவிட்ட பிறகு அதை மாற்றுவதற்குப் பேரவைத்தலைவருக்குக்கூட அதிகாரம் கிடையாது. எனவே, அதையே மறுமுறையும் கூறவேண்டும் என்பது பொருள் அற்றதாக இருக்கிறது. நமது நடைமுறைகளில், இங்கிலாந்தில் உள்ள பாராளுமன்ற நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்பது அரசியல் சட்டப்படி அரசியல் சட்டத்தின் 194-வது விதியின்படி—என்னுடைய கடமையாக இருக்கிறது. இன்று தமிழ்நாட்டில் மேலவையிலும் நடந்து வருகிற நடைமுறை இப்போது நான் கூறியபடி தான் இருக்கிறது. ஒன்று மட்டும் உறுப்பினர்களுக்கு வாக்குறுதி சொல்கிறேன். உறுப்பினர்கள், வாக்குகளை எண்ணிப் பார்த்து முடிவு கூறவேண்டுமென்று விரும்பினால், அதற்கு முழுவாய்ப்பு கொடுக்கப்படும். இப்போது அடுத்த அலுவல்—மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

•